திரு. க. இராமமூர்த்தி : சட்டமன்ற தலைவர் அவர்களே, செய்யப்பட்ட திருமணங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். ஒன்றை மட்டும் கடைசியாக சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டினுடைய எல்லா மக்களையும் கட்டுப்படுத்துகின்ற அளவிலே செய்ய வேண்டுமென்றால் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது கூட வரவேற்கத்தக்கதுதான். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆட்சியிலே இருக்கிற அரசாங்கம் எடுத்திருக்கிற முடிவுகளை ஒரு சிலர் ஏற்கவில்லை என்றாலும் எடுக்க வேண்டிய பொறுப்புகளுக்குத் தன்னைக் கட்டுபடுத்திக்கொள்வார்கள். நான் புதிதாக சொல்லி ஆட்சியிலே இருப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. முடிவுகளை எடுக்க வேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டால்தான் எடுக்க வேண்டுமென்பது இல்லை. இது போன்ற நிலைமைகளில் நம்மை ஆதரிக்கின்ற நிலைமையும் எதிர்க்கின்ற நிலைமையும் ஏற்படும் என்பது நமக்குத் தெரியாததல்ல. ஆகவே அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியின் பேரில் நான் இந்த மசோதாவை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு செயலிழந்தோர் மறுவாழ்வளிப்பு வேலைவாய்ப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு செயலிழந்தோர் மறுவாழ்வளிப்பு—வேலைவாய்ப்பு மசோதாவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பின் 304 (பி) பிரிவின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர் முன்-ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறார்கள்.

(7) தனியார் அலுவல்கள்—தொடர்ச்சி.

(1) மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு செயலிழந்தோர் மறுவாழ்வளிப்பு வேலையமைப்பு மசோதா.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு செயலிழந்தோர் மறுவாழ்வளிப்பு—வேலையமைப்பு மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : நான் இந்த மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.